# திருக்குறள் திறன் போட்டி - 2025




## உள்ளடக்கம்


1. **தி.போ-25-01 :** போட்டி தொடர்பான நெறிமுறைகள்
2. **தி.போ-25-02 :** போட்டி நடைமுறைகள்
3. **தி.போ- 25-03 :** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்தில் முதலிடம் பெற்ற போட்டியாளர் விபரப் படிவம்
4. **தி.போ- 25-04** : தமிழ்ச்சோலை மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குத் திணைக்களமட்டப் போட்டி, இறுதிப்போட்டி நடைமுறைகளை ( அதி.போ-25-02) வழங்கியமையை உறுதிப்படுத்தும் படிவம்
5. **போட்டிக்குரிய திருக்குறள்கள்**
    1. அதிபாலர் பிரிவு
    2. பாலர் பிரிவு
    3. கீழ்ப்பிரிவு
    4. நடுவண்பிரிவு - அ
    5. நடுவண்பிரிவு - ஆ
    6. மேற்பிரிவு - அ
    7. மேற்பிரிவு - ஆ
    8. உயர்பிரிவு
    9. அதி உயர்பிரிவு


**இந்த ஆவணம் 09-02-2025 அன்று தமிழ்ச்சோலை நிர்வாகிகள் சந்திப்பில் வெளியிடப்பட்டது.**

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

## போட்டி தொடர்பான நெறிமுறைகள்

**1.** தமிழ்ச்சோலைகளில் தமிழ்மொழி கற்பவர்கள் மட்டுமே போட்டியில் பங்குபற்ற முடியும்.

**2.** போட்டிக்கான பிரிவுகளும் போட்டியாளர் அகவை எல்லைகளும்.

| | | |
|---|---|---|
| **1.** அதிபாலர் பிரிவு | : | **31-08-2019** இற்குப் பின் பிறந்தோர் |
| **2.** பாலர் பிரிவு | : | **01-09-2017** முதல் **31-08-2019** வரை பிறந்தோர் |
| **3.** கீழ்ப்பிரிவு | : | **01-09-2015** முதல் **31-08-2017** வரை பிறந்தோர் |
| **4.** நடுவண்பிரிவு - அ | : | **01-09-2013** முதல் **31-08-2015** வரை பிறந்தோர் |
| **5.** நடுவண்பிரிவு - ஆ | : | **01-09-2011** முதல் **31-08-2013** வரை பிறந்தோர் |
| **6.** மேற்பிரிவு - அ | : | **01-09-2009** முதல் **31-08-2011** வரை பிறந்தோர் |
| **7.** மேற்பிரிவு - ஆ | : | **01-09-2007** முதல் **31-08-2009** வரை பிறந்தோர் |
| **8.** உயர்பிரிவு | : | **01-09-2005** முதல் **31-08-2007** வரை பிறந்தோர் |
| **9.** அதி உயர்பிரிவு | : | **01-09-2005** இற்கு முன் பிறந்தோர் |

**3. திருக்குறள் திறன் போட்டிகள் மூன்று கட்டங்களாக நடைபெறும்.**

**அ.** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டம்

**ஆ.** திணைக்கள மட்டம்

**இ.** இறுதிப்போட்டி

**4.** தமிழ்ச்சோலை மட்டத்திலான போட்டி **23.06.2025 இற்கு முன்பு** நடத்தப்படல் வேண்டும். போட்டி நடைபெறும் நாளினைப் பள்ளி நிர்வாகமே தெரிவுசெய்ய வேண்டும்.

**5.** தமிழ்ச்சோலை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கு அந்தந்தத் தமிழ்ச்சோலை நிர்வாகமே வேறு தமிழ்ச்சோலைகளின் ஆசிரியர்களை நடுவர்களாகக் கடமையாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு நடுவர்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் இருப்பின் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தின் உதவியை நாடலாம். ஆனால், எக்கரணியம் கொண்டும் அதே தமிழ்ச்சோலையில் கற்பிக்கும் ஆசிரியரை நடுவராகப் பணியாற்ற இசைவளிக்கக் கூடாது.

**6.** தமிழ்ச்சோலை மட்டத்திலான போட்டியின் போது தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் வழங்கப்படும் புள்ளிப்படிவமே பயன்படுத்தப்பட வேண்டும். இப்புள்ளித்தாள் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.





**7.** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்திலான போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாமிடம் பெறும் வெற்றியாளர்கள் திணைக்களமட்டப் போட்டிக்குத் தகுதி பெறுவர். இவர்களின் விளத்தங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்தில் முதலிடம் பெற்ற போட்டியாளர் விபரப் படிவத்தில் (தி.போ-25-03) நிரப்பி, 13.07.2025 இற்கு முன் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

**8.** தவிர்க்க முடியாத கரணியத்தால முதலாமிடம் பெற்றவரால் திணைக்களமட்டப் போட்டியில் பங்குபற்ற முடியாது போயின், இரண்டாமிடம் பெற்றவர் திணைக்களமட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும். இது தொடர்பான விளத்தங்கள் நிர்வாகியால் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்திற்கு 21.09.2025 இற்கு முன்பு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

**9.** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்தில் நடைபெறும் போட்டியின் போது ஒவ்வொரு பிரிவிலும் **முதல் மூன்று இடங்களினைப் பெறும் மாணவர்கள்** அந்தந்தத் தமிழ்ச்சோலைப் பள்ளியில் மதிப்பளிக்கப்படல் வேண்டும்.

**10.** திணைக்கள மட்டத்திலான போட்டிகள் 19.10.2025 இல் நடைபெறும். போட்டி நடைபெறும் இடம், நேரம் தொடர்பான விளத்தங்கள் உரியகாலத்தில் அறிவிக்கப்படும். திணைக்களமட்டப் போட்டி பின்வரும் அடிப்படையில் எட்டுப் பிரிவுகளாக நடைபெறும்.

- **திணைக்களம் - 75**
- **திணைக்களம் - 77**
- **திணைக்களம் - 78 - 91 - 92**
- **திணைக்களம் - 93 ( அ )**
- **திணைக்களம் - 93 ( ஆ )**
- **திணைக்களம் - 94**
- **திணைக்களம் - 95**
- **வெளிமாகாணங்கள்**

**11.** திணைக்கள மட்டத்திலான போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாவது இடத்தைப் பெறும் வெற்றியாளர்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவர். (திணைக்களமட்டப் போட்டியின் போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்).

**12.** இறுதிப் போட்டி **02.11.2025 இல்** நடைபெறும். போட்டி நடைபெறும் இடம், நேரம் தொடர்பான விளத்தங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**13.** இறுதிப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களும், இறுதிப்போட்டியில் பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களும் **21.12.2025 அன்று நடைபெறும் தமிழ்ச்சோலை முத்தமிழ் விழாவில்** வெற்றிச்சின்னம் அல்லது பதக்கமும், சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கப்படுவர்.

## தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டப் போட்டிநெறிமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனனஞ்செய்து, ஒப்புவித்தல் வேண்டும்.

- **மனனம்**
- **ஒலிப்பு**
- **பலுக்கல்**
- **உணர்வு**
- **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

**எல்லாப்பிரிவுகளிலும் அதிகாரம் கூறப்பட வேண்டும்.**



## திருக்குறள் திறன் போட்டி - 2025 - திணைக்களமட்டப் போட்டி நெறிமுறைகள்

**அதிபாலர் பிரிவு** : திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

**பாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும். (திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)

---

ஏனைய பிரிவுகள் (கீழ்ப்பிரிவு, நடுவண் பிரிவுகள், மேற்பிரிவுகள் , உயர் பிரிவு, அதிஉயர் பிரிவு) :

திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **குறள்களில் உள்ள இடைச்சொற்களைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.

- ***மனனம்***
- ***ஒலிப்பு***
- ***பலுக்கல்***
- ***உணர்வு***
- ***நிலை***

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.
எல்லாப்பிரிவிலும் அதிகாரம் கூறப்படல் வேண்டும்.

திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.




நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

# திருக்குறள் திறன் போட்டி - 2025 - இறுதிப் போட்டி நெறிமுறைகள்

**அதிபாலர் பிரிவு** : திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

**பாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும். (திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)

---

ஏனைய பிரிவுகள் (கீழ்ப்பிரிவு, நடுவண் பிரிவுகள், மேற்பிரிவுகள் , உயர் பிரிவு, அதிஉயர் பிரிவு) :

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **குறள்களில் உள்ள இடைச்சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.

- மேற்பிரிவிலிருந்து அதிகாரத்தைக் குறிப்பிட்டு அதிகார எண் கேட்கப்படும்.
- குறிப்பிட்ட குறளுக்குரிய அதிகாரத்தைக் கூறுமாறு கேட்கப்படும்.
- குறள்களின் பொருள்களுக்குரிய விளக்கம் தொடர்பான வினாக்கள் வினவப்படும்.

- ***மனனம்***
- ***ஒலிப்பு***
- ***பலுக்கல்***
- ***உணர்வு***
- ***நிலை***

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

அதிபாலர் பிரிவு ( 31-08-2019 இற்குப்பின் பிறந்தோர் )




1. அதிகாரம் : முதற்பகவன் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

2. அதிகாரம் : கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

3. அதிகாரம் : அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

4. அதிகாரம் : புகழ்

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்

## திருக்குறள் திறன் போட்டி - 2025

பாலர் பிரிவு : 01-09-2017 - 31-08-2019




1. **அதிகாரம் : செய்ந்நன்றி அறிதல்**

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது**

2. **அதிகாரம் : அறிவுடைமை**

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு**

3. **அதிகாரம் : இன்னா செய்யாமை**

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்**

4. **அதிகாரம் : கல்வி**

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்**

5. **அதிகாரம் : ஒழுக்கமுடைமை**

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்**

பொருள் : ஒருவனுக்கு நல்லொழுக்கம் என்றும் நன்மை தரும். தீயொழுக்கம் எக்காலத்திலும் துன்பமே தரும்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

கீழ்ப்பிரிவு : 01-09-2015 - 31-08-2017




**1. அதிகாரம் : முதற்பகவன் வாழ்த்து**

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல**

பொருள் : விருப்பு வெறுப்பில்லாத இறைவனடி சேர்ந்தார்க்கு எங்கும் எக்காலத்திலும் துன்பம் இல்லை.

**2. அதிகாரம் : பொறையுடைமை**

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

பொருள் : தன்னைத் தோண்டுபவரை விழாமல் தாங்கும் நிலம் போல, தம்மை மதியாது தீங்கு செய்பவரைப் பொறுத்தல் தலையாய அறமாகும்.

**3. அதிகாரம் : அழுக்காறாமை**

**ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு**

பொருள் : ஒருவன் தன் நெஞ்சத்தில் பொறாமை இல்லாத தன்மையை, தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொள்ளவேண்டும்.

**4. அதிகாரம் : வெகுளாமை**

**மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
**பிறத்தல் அதனான் வரும்**

பொருள் : எவரிடத்திலும் சினங்கொள்ளுதலை மனதாலும் நினைக்கக் கூடாது.
அதனால் பலவகையான தீமைகள் உண்டாகும்.

**5. அதிகாரம் : வலியறிதல்**

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்**

பொருள் : தன் செல்வத்தின் அளவறிந்து, அதற்கேற்ப வாழாதவன் வாழ்க்கையில், பொருள் இருப்பது போலத் தோன்றினாலும் இல்லாது அழிந்துவிடும்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

நடுவண்பிரிவு - அ : 01-09-2013 - 31-08-2015




1. **அதிகாரம் : பெரியாரைத் துணைக்கோடல்**

**அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

**பொருள் :** அறத்தின் இயல்பை அறிந்த, தன்னிலும் மூத்த அறிவுடையோரின் நட்பை, தரம் அறிந்து ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. **அதிகாரம் : இடுக்கணழியாமை**

**வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

**பொருள் :** வெள்ளம் போல வரும் துன்பங்கள் எல்லாம், அறிவுடையவன் மனதில் ஒன்றுமில்லை என்று நினைத்தமட்டில் நீங்கிவிடும்.

3. **அதிகாரம் : சிற்றினஞ் சேராமை**

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு.**

**பொருள் :** நீரானது தான் சேரும் நிலத்தின் தன்மையைப் பெறுவது போல, மாந்தரின் அறிவும் அவர் சேரும் இனத்தின் தன்மையைப் பெறும்.

4. **அதிகாரம் : புல்லறிவாண்மை**

**அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை**
**இன்மையா வையா துலகு**

**பொருள் :** ஒருவனுக்கு வறுமைகள் எல்லாவற்றுள்ளும் மிகக்கொடியது அறிவில்லாமை. மற்றச் செல்வமின்மையை உயந்தோர் வறுமையாகக் கருதமாட்டார்.

5. **அதிகாரம் : காலமறிதல்**

**ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்**
**கருதி இடத்தாற் செயின்**

**பொருள் :** ஒருவன் தகுந்த காலமும் இடமும் அறிந்து செயற்படுவானாயின், உலகைக் கைப்பற்ற விரும்பினும் கைகூடும்.

6. **அதிகாரம் : புறங்கூறாமை**

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்**
**திறன்தெரிந்து கூறப் படும்**

**பொருள் :** அடுத்தவனின் குறையை, அவன் இல்லாத போது எவன் கூறுகிறானோ, அவனது குறை அவன் எதிரிலேயே இன்னொருவனால் கூறப்படும்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

நடுவண்பிரிவு - ஆ : 01-09-2011 - 31-08-2013




**1.அதிகாரம் : பெரியாரைத் துணைக்கோடல்**

**அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**

**பேணித் தமராக் கொளல்**

**பொருள் :** பெரியோரை விரும்பி, தமக்குரிய சுற்றத்தினராகப் பெற்றுக்கொள்ளுதல், பெறுதற்கரிய பேறுகளுள் எல்லாம் பெரும் பேறாகும்

**2.அதிகாரம் : இடுக்கணழியாமை**

**இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**

**துன்பம் உறுதல் இலன்**

**பொருள் :** இன்பத்தைச் சிறப்பாக விரும்பாது, துன்பம் வருவதும் இயல்பென்று தெரிந்திருப்பவன், எந்தக் காலத்திலும் துன்பம் அடையமாட்டான்.

**3. அதிகாரம் : சிற்றினஞ் சேராமை**

**மனந்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்**

**இனந்தூய்மை தூவா வரும்.**

**பொருள் :** ஒருவனது உளத்தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இரண்டும்
அவன் சேர்ந்த இனத்தூய்மையைப் பொறுத்தே அமையும் .

**4. அதிகாரம் : புல்லறிவாண்மை**

**அருமறை சோரும் அறிவிலான் செய்யும்**

**பெருமிறை தானே தனக்கு.**

**பொருள் :** பிறரிடம் சொல்லக்கூடாத செய்திகளை வெளியிடும் அறிவில்லாதவன், தனக்குத் தானே பெருங்கேட்டைத் தேடிக்கொள்வான்.

**5. அதிகாரம் : காலமறிதல்**

**அருவினை யென்ப உளவோ கருவியாற்**

**காலம் அறிந்து செயின்.**

**பொருள் :** சிறந்த கருவியொடு, தகுந்த காலமறிந்து செய்யும் ஒருவருக்கு, முடித்தற்கு அரிய செயலென்று சொல்லப்படுவது எதுவும் இல்லை

**6. அதிகாரம் : புறங்கூறாமை**

**கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**

**முன்னின்று பின்நோக்காச் சொல்.**

**பொருள் :** ஒருவன் எதிரே நின்று கடுஞ்சொற்களைச் சொல்லினும், அவன் இல்லாதவிடத்து பின் விளையுந் தீமையை நோக்காத புறங்கூற்றுச் சொற்களைச் சொல்லாது ஒழிக.

## திருக்குறள் திறன் போட்டி - 2025

மேற்பிரிவு - அ : 01-09-2009 - 31-08-2011

1. **அதிகாரம் 14 - ஒழுக்கமுடைமை**

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**தேரினும் அஃதே துணை**

**பொருள் :** ஒழுக்கத்தை கெடாதவாறு பேணிக் காக்க வேண்டும்.
பலவற்றையும் ஆராய்ந்து தெளிந்தாலும் ஒழுக்கமே வாழ்வின் துனணயாக அமையும்.

2. **அதிகாரம் 41 – கல்லாமை**

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**

**சொல்லா திருக்கப் பெறின்**

**பொருள் :** தம் அறிவின்மையை உணர்ந்து கற்றோர் அவையின்கண், தாம் ஒன்றும் சொல்லாது அடக்கமாயிருப்பாராயின் கல்லாதவரும் மிக நல்லவரே .

3. **அதிகாரம் 29 – கள்ளாமை**

**களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து**

**ஆவது போலக் கெடும்.**

**பொருள் :** களவினால் உண்டான செல்வம் வளர்வது போலத் தோன்றி அளவு கடந்து கெடும்.

4. **அதிகாரம் 89 - உட்பகை**

**வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**

**கேள்போல் பகைவர் தொடர்பு.**

**பொருள் :** வாளைப் போல் வெளிப்படையாகப் பகைக்கும் பகைவர்க்கு ,அஞ்சத் தேவையில்லை. ஆனால் உறவினர் போல இருந்து, மறைவாகப் பகைக்கும் போலியுறவுக்கு அஞ்சுதல் வேண்டும்.

5. **அதிகாரம் 80 – நட்பாராய்தல்**

**நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**

**வீடில்லை நட்பாள் பவர்க்கு**

**பொருள் :** ஒருவரோடு நட்புச் செய்தபின் அவரை விட்டு விலகுதல் இயலாது. ஆதலால் ஆராயாது நட்புச் செய்தல் கேடு தரும்.

6. **அதிகாரம் 44 - குற்றங்கடிதல்**

**குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**

**அற்றந் தரூஉம் பகை.**

**பொருள் :** தனக்கு அழிவை உண்டாக்கும் பகை தன் குற்றமே. ஆதலால் தன்னிடத்துக் குற்றம் வராமல் இருக்கும் பொருட்டுக் காத்துவருக.

7. **அதிகாரம் 62 - ஆள்வினையுடைமை**

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும்**

**பொருள் :** விடாமுயற்சி செல்வத்தை உண்டாக்கவும் வளர்க்கவும் செய்யும்.
முயற்சியில்லாமை ஒருவனை வறுமைக்குட் செலுத்திவிடும்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

மேற்பிரிவு - ஆ : 01-09-2007 - 31-08-2009

1. அதிகாரம் 14 - ஒழுக்கமுடைமை

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

பொருள் : ஒழுக்கத்தினால் எல்லோரும் உயர்வடைவர்.ஒழுக்கம் தவறுவதால் தாம் அடையத் தகாத பழியை அடைவர்.

2. அதிகாரம் 41 – கல்லாமை

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு

பொருள் : கல்லாதவரிடம் சேர்ந்த செல்வம், கற்றவரிடம் சேர்ந்த வறுமையிலும் தீயதே ஆகும்.

3. அதிகாரம் 29 – கள்ளாமை

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

பொருள் : தீவினைகளைத் தம் நெஞ்சாற் கருதுதலும் குற்றமாகும். ஆதலால் பிறன் பொருளை அவனறியாமற் கவர்வோம் என்று நினைப்பதும் குற்றமாகும்.

4. அதிகாரம் 89 - உட்பகை

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி.

பொருள் : உட்பகை உண்டான குடி, அரத்தால் அராவப்பட்ட இரும்பு போல, உட்பகையால் அராவப்பட்டு வலிமை குன்றும்.

5. அதிகாரம் 80 – நட்பாராய்தல்

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்

பொருள் : ஒருவனுடைய குணம் செயல்களை ஆராய்ந்து பாராது கொள்ளும் நட்பு, துன்பத்தை உண்டாக்கும்.

6. அதிகாரம் 44 - குற்றங்கடிதல்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

பொருள் : குற்றம் நேர்வதற்கு முன்பே அதையறிந்து தடுக்காதவன் வாழ்க்கை, அது நேர்ந்தவுடன் நெருப்பின் முன் நின்ற வைக்கோற்போர் போல அழிந்து விடும்.

7. அதிகாரம் 62 - ஆள்வினையுடைமை

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றுந் தூண்

பொருள் : தனக்கு இன்பத்தை விரும்பாதவனாய் வினைமுடித்தலையே விரும்புகின்றவன், தன் சுற்றத்தின் வறுமையைப் போக்கி அதைத் தாங்கும் தூணாவான்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

உயர்பிரிவு : 01-09-2005 - 31-08-2007

1. **அதிகாரம் 8 – அன்புடைமை**

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**

**அன்பி லதனை அறம்.**

**பொருள் :** எலும்பில்லாத உடலை வெயில் எரிப்பது போல், அன்பில்லாத உயிரை அறம் எரிக்கும்.

2. **அதிகாரம் 12 – நடுவுநிலைமை**

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**

**அன்றே யொழிய விடல்**

**பொருள் :** அறவழியில் வந்த செல்வம் போல் நன்மையே தந்தாலும், நடுவுநிலைமை தவறி வரும் செல்வத்தை அப்பொழுதே விட்டு விடவேண்டும்.

3. **அதிகாரம் 28: கூடாவொழுக்கம்**

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**

**ஐந்தும் அகத்தே நகும்.**

**பொருள் :** பிறரை வஞ்சிக்கும் மனம் உடையவனின் பொய்யொழுக்கத்தை, அவன் உடம்பில் கலந்துள்ள ஐம்பூதங்களும் எள்ளிச் சிரிக்கும்.

4. **அதிகாரம் 42 – கேள்வி**

**கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்**

**தோட்கப் படாத செவி.**

**பொருள் :** கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள் ஓசையொலிகளைக் கேட்கும். ஆயினும் கேளாத்தன்மை உடையனவே.

5. **அதிகாரம் 84 - பேதைமை**

**நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**

**பேணாமை பேதை தொழில்**

**பொருள் :** வெட்கப்படவேண்டிய செயலுக்கு வெட்கப்படாமலும், ஆய்ந்து பார்க்கவேண்டியவற்றை ஆய்ந்து பாராமலும் எவரிடத்திலும் அன்பில்லாதிருப்பதும், பேணிக்காக்க வேண்டியவற்றைக் காக்காமல் இருப்பதும் பேதையின் செயல் போன்றதாகும்.

6. **அதிகாரம் 98 - பெருமை**

**பணியுமா மென்றும் பெருமை சிறுமை**

**அணியுமாந் தன்னை வியந்து**

**பொருள் :** பெருமையுடைவர் எக்காலத்திலும் செருக்கின்றி அடங்கி நடப்பர். சிறுமையுடையவர் எக்காலத்திலும் தம்மை உயர்வுபடுத்தியே கூறுவர்.

7. **அதிகாரம் 100 – பண்புடைமை**

**அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**

**மக்கட்பண் பில்லா தவர்**

**பொருள் :** அரத்தின் கூர்மை போலும் கூரிய அறிவுடையவராயினும் நன்மாந்தற்குரிய பண்பில்லாதவர் மரத்தையே ஒப்பர்.

# திருக்குறள் திறன் போட்டி - 2025

அதி உயர்பிரிவு : 01-09-2005 இற்கு முன் பிறந்தோர்



### 1. அதிகாரம் 30 - வாய்மை

**தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**

**தன்நெஞ்சே தன்னைச் சுடும்.**

**பொருள் :** ஒருவன் தன் நெஞ்சு அறிந்ததொன்றைப் பிறர் அறியவில்லை என்று கருதிப் பொய்சொல்வானாயின், அவனது நெஞ்சே அத்தீவினைக்குச் சான்றாக நின்று துன்புறுத்தும்.

### 2. அதிகாரம் 31 – வெகுளாமை

**நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்**

**பகையும் உளவோ பிற.**

**பொருள் :** இல்லறத்தாருக்கு அன்பாலும் துறவறத்தாருக் அருளாலும் முகத்தின்கண் தோன்றும் மலர்ச்சியையும் மனத்தின் கண் தோன்றும் மகிழ்ச்சியையும் கெடுப்பது சினமல்லாது வேறு உண்டோ ?

### 3. அதிகாரம் 53 - சுற்றந் தழால்

**பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்**

**சுற்றத்தார் கண்ணே உள**

**பொருள் :** ஒருவன் தனது செல்வத்தை அல்லது அதிகாரத்தை இழந்து தனிமைப் பட்ட போதும், அவனோடு தமக்கிருந்த பழைய உறவைச் சொல்லிப் பாராட்டும் இயல்பு உறவினரிடத்திலேயே உள்ளது.

### 4. அதிகாரம் 66 - வினைத்தூய்மை

**எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**

**மற்றன்ன செய்யாமை நன்று**

**பொருள் :** என்ன செய்தோம் என்று பின்னர் வருந்தக்கூடிய செயல்களைச் செய்யவே கூடாது. செய்துவிட்டால் பின் அத்தன்மையானவற்றைச் செய்யாமல் இருப்பது நன்று.

### 5. அதிகாரம் 88 - பகைத்திறம் தெரிதல்

**ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்**

**பல்லார் பகைகொள் பவன்**

பொருள் : தான் தனியாக இருந்து பலருடைய பகையைத் தேடிக்கொள்பவன், பித்துப் பிடித்தவரைவிட அறிவில்லாதவனாகக் கருதப்படுவான்.

அடுதத் பக்கமும் பார்க்கவும்

# திருக்குறள் திறன் போட்டி - 2025

அதி உயர்பிரிவு : 01-09-2005 இற்கு முன் பிறந்தோர்

முன் பக்கத் தொடர்ச்சி....



6. **அதிகாரம் 86 : இகல்**

**பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னா செய்யாமை தலை**

**பொருள் :** ஒருவன் தன்னோடு சேராது, அன்பில்லாதவற்றைச் செய்தாலும் அவனுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் சிறந்தது.

7. **அதிகாரம் 82 - தீ நட்பு**

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு**

**பொருள்:** சொல்லொன்றுஞ் செயலொன்றுமாயிருப்பவரின் நட்பு நனவில் மட்டுமின்றி, கனவில் நிலைப்பினும் துன்பம் தருவதாம்.

8. **அதிகாரம் 80 - நட்பாராய்தல்**

**உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு**

**பொருள் :** ஊக்கம் குறைவதற்குக் கரணியமான செயல்களைச் செய்ய நினைக்கக் கூடாது. அதுபோல் துன்ப காலத்தில் கைவிடுபவரின் நட்பையும் கொள்ளக் கூடாது.

9. **அதிகாரம் 73 - அவையஞ்சாமை**

**கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்**

**பொருள் :** கற்றவரின் முன் தாம் கற்றவைகளை அவருடைய மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லோரிலும் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார்.

10. **அதிகாரம் 67 – வினைத்திட்பம்**

**துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை**

**பொருள் :** செயல் செய்யுங்கால் தமக்குத் துன்பம் மிகுதியாக வருமாயினும் அது பற்றித் தளராமல் முடிவில் இன்பந்தரும் செயலை மனத்திண்மையுடன் செய்ய வேண்டும்.